
# மகுடம்

## இதழ் - 02







## யா/சுன்னாகம் றோ.க.த.க. பாடசாலை

### அதிபர் அறிக்கை - 2016

யா/சுன்னாகம் றோ.க.த.க. பாடசாலை

# ஒளிவிழாவும்
# பரிசளிப்பு விழாவும் - 2016

காலம் : 19-11-2016 சனிக்கிழமை

நேரம் : முற்பகல் 9.30 மணி

இடம் : பாடசாலை மண்டபம்

தலைவர்

**திருமதி யா. சதீஸ்குமார்**

(அதிபர்)

ஆசியுரை

**அருட்தந்தை ம. றெக்ஸ் சவுந்தரா அடிகளார்**

(பங்குத்தந்தை, சென் அன்ரனிஸ், சுன்னாகம்)

பிரதம விருந்தினர்

**திரு. ச. சிவானந்தராசா அவர்கள்**

(கோட்டக்கல்வி அதிகாரி, உடுவில்)

சிறப்பு விருந்தினர்

**லயன். செ. மகாதேவா MJF அவர்கள்**

(உறுப்பினர், லயன்ஸ் கழகம், சுன்னாகம்)

நினைவுப் பேருரை

**திரு. ஆ. ரவீந்திரன் அவர்கள்**

(சிரேஸ்ட விரிவுரையாளர், யாழ்ப்பாணம்,
தேசிய கல்வியியல் கல்லூரி)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

பாடசாலைச் சமூகம்
யா/ சுன்னாகம் றோ.க.த.க
பாடசாலை

# யா/ சுன்னாகம் றோ. க. த. க. பாடசாலை

**மகுட வாசகம்**

"கற்றாங்கொழுகு"

**தூரநோக்கு :**

புதிய அறிவியத்தை உற்பத்தி செய்யும் மாணவர் சமூகத்தை உருவாக்குவோம்.

**பணிக்கூற்று :**

தரமான கல்வியின் ஊடாக மாற்றமுறும் உலகினை வெற்றி கொள்ளும் மிருதுநிலைச் சமூகத்தை கட்டியெழுப்புவோம்.

# அதிபர் உள்ளத்திலிருந்து எழும் அறிக்கை

சர்வ வல்லமை கொண்ட புனித அந்தோனியாரின் பாதார விந்தங்களைப் பணிந்த போற்றி அறிவொடு ஒழுக்கமும் அன்பொடு பண்பும் தந்து மாணவச் செல்வங்களை உருவாக்கி வரும் எம் கலைக்கூட அன்னைக்கு தலை வணங்கி நிறுவிய வள்ளல்களை நினைவிருத்தி 2016ஆம் ஆண்டுக்குரிய அதிபர் அறிக்கையைச் சமர்ப்பிப்பதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

இன்றைய நன்னாளில் ஆசியுரை வழங்கி அமர்ந்திருக்கும் அருட்தந்தை ம. றெக்ஸ் சவுந்தரா அடிகளார் அவர்களே!

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக அணிசெய்யும் கோட்டக் கல்வி அதிகாரி மதிப்பார்ந்த திரு. ச. சிவானந்தராசா அவர்களே!

சிறப்பு விருந்தினராகக் கலந்து சிறப்பித்துக் கொண் டிருக்கும் லயன் செ. மகாதேவா அவர்களே!

இன்று நினைவுப் பேருரை ஆற்றுவதற்கு வருகை தந்திருக்கும் திரு. ஆ. ரவீந்திரன் அவர்களே!

எமது அயற்பாடசாலை அதிபர்களே! ஆசிரியர்களே! ஆசிரிய ஆலோசகர்களே! எமது பாடசாலையில் பிள்ளையின் கல்வி முன்னேற்றத்திற்காக அர்ப்பணிப்புடன் அயராது பாடுபட்டுக் கொண்டிருக்கும் அன்பான சகோதர ஆசிரியர்களே! பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களே! பழைய மாணவர்களே! அன்பான மாணவச் செல்வங்களே! மதிப்பார்ந்த பெற்றோர்களே! நலன்விரும்பிகளே! உங்கள் அனைவருக்கும் உளம் கனிந்த வணக்கத்தை தெரிவித்துக் கொண்டு அனைவரையும் வருக வருகவென இருகரம் கூப்பி வரவேற்பதில் பேருவகை அடைகின்றேன்.

தற்போது ஆசியுரை வழங்கி அமர்ந்திருக்கும் அருட்தந்தை ம. றெக்ஸ் சவுந்தரா அடிகளார் அவர்கள் பலாலியைப் பிறப்பிட மாகக் கொண்ட திரு. திருமதி மனுவேற்பிள்ளை தம்பதியினருக்கு மகனாகப் பிறந்தார். இவர் ஆரம்பக் கல்வி யா/மயிலிட்டி றோ.க.த.க பாடசாலையிலும், தரம் 6 - 8 வரை யா/பலாலி அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையிலும் தரம் 9 முதல் க.பொ.த உயர்தரம் வரை யா/சென்பற்றிக்ஸ் கல்லூரியிலும் கற்று தொடர்ந்து 8 வருடங்கள் யா/புனித பிரான்சிஸ் குருத்துவக் கல்லூரியில் குருத்துவப் பயிற்சியை பயின்று 1996-07-11ஆம் திகதியன்று குருத்துவப் பட்டம் பெற்றார். இவர் இத்தாலி நாட்டின் தலநகர் றோமில் மெய்யியல் முதுகலைமாணி பட்டத்தை தன்னகத்தே பெற்றார். 2005ஆம் ஆண்டு தொடக்கம் இன்றுவரை குருத்துவக் கல்லூரியில் மாணவர்களுக்கு மெய்யியல் பாடத் தையும் பங்கில் உள்ள தேவாலயங்களில் குருத்துவப் பணியையும், யா/சுன்னாகம் புனித அந்தோனியார் தேவாலயத் திலும் பங்குத் தந்தையாகவும் பணியாற்றி வருகின்றார்.

இவர் எமது பாடசாலையில் ஏற்படும் இடர்பாடுகளை அறிந்து அவற்றை நீக்குவதற்கு எமக்குப் பலதரப்பட்ட வழிகளில் முன்நிற்பவராகவும் பழகுவதற்கு எளிமையானவராகவும் திகழ் கின்றார். மேலும் அவரது தன்னலமற்ற சேவை எமக்கு எந்நாளும் கிடைக்க வேண்டும். அந்த வகையில் இன்று எமது அழைப்பை ஏற்று வருகை தந்தமை எம்மை மகிழ்ச்சியில் ஆழ்த்தவதுடன் அடிகளார் நீண்ட ஆயுள் பெற்று இறை பணியை சிறப்பாக ஆற்ற இறையாசியை வேண்டி வரவேற் பதில் பேருவகை அடைகின்றேன்.

பிரதம விருந்தினராக வருகை தந்திருக்கும் எம் கோட்டக் கல்வி அதிகாரி திரு. ச. சிவானந்தராசா அவர்கள் மாவிட்ட புரத்தைப் பிறப்பிடமாகவும், தெல்லிப்பழையை வசிப்பிடமாகவும் கொண்டவர். திரு. திருமதி சங்கரப்பிள்ளை தம்பதியினருக்கு மகனாகப் பிறந்த இவர் ஆரம்பக்கல்வியை யா/கொல்லங்கலட்டி சைவத்தமிழ் வித்தியாசாலையிலும் இடைநிலைக் கல்வி, உயர் கல்வியை யா/தெல்லிப்பழை யூனியன் கல்லூரியிலும் சிறப்புறக் கற்றார்.

இவர் கலைப்பட்டதாரி, பட்டப்பின் கல்வி டிப்ளோமா, அதிபர் சேவை தரம் போன்ற பட்டங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளார். இவர் தனது அலுவலகப் பணியைப் பாராது கீழ் இறங்கி வந்து பணியாற்றுகின்ற உயர்ந்த மனப்பாங்கை உடையவர். எமது வலயத்தின் பாடசாலைத் தேவைகளையும் தானாகவே அறிந்து நிறைவேற்றும் உயர்குணம் படைத்த பெருமகனாக விளங்குகின்றார். இவர் தெல்லிப்பழைத் தமிழர் சங்கத் தலைவராகவும், 04-11-2016ஆம் திகதி சுன்னாகம் லயன்ஸ் கழகத்தில் தன்னை இணைத்து லயன்ஸ் சேவையிலும், தெல்லிப்பழை நோயாளர் நலன்புரிச் சங்கத்திலும் உறுப்பினராகவும் இணைந்து அர்ப் பணிப்பும், தியாக சிந்தனையுடன் தன்னலமற்ற நற்சேவையை ஆற்றிவருகின்றார். இவர் எமது பாடசாலைக்கு வருகை தந்ததையிட்டு பேருவகை அடைகின்றோம். அவர் எல்லா வகைச் சிறப்பும் பெற்று விளங்க அகமகிழ்ந்து வாழ்த்துவதுடன் அவரை வரவேற்பதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

அடுத்து சிறப்பு விருந்தினராக வருகை தந்திருக்கும் அன்புக்குரிய லயன் செ. மகாதேவா அவர்கள் கந்தரோடையைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு. திருமதி செல்லத்துரை தம்பதியினருக்கு மகனாகப் பிறந்த இவர் தனது ஆரம்ப, இடைநிலை, உயர்நிலைக் கல்வியினை யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் கற்றார். இவர் இலங்கை போக்குவரத்துச் சபையில் பணியாற்றி இளைப்பாறி ஓய்வு காலத்தில் பல அரிய சேவைத் திட்டங்களை முன்னெடுத்து வரும் பெருமகனார். இவரின் முழுமையான பங்களிப்பின் மூலம் சுன்னாகம் லயன்ஸ் கழகத்தினால் தரம் 5 புலமைப்பரிசில் மாணவர் கௌரவிப்பு நிகழ்வை 12ஆவது தடவையாகவும் சிறப்பாக நடாத்தி வருவது குறிப்பிடத்தக்கது. இத்தகைய வள்ளல் எமது அழைப்பை ஏற்று வருகை தந்திருப்பது எமக்கு மகிழ்ச்சியைத் தருகின்றது. இவர் எல்லா வகைச் சிறப்பும் பெற்று இவரின் பணி தொடர வாழ்த்துவதுடன் அவரை இன்முகத்துடன் வரவேற்கின்றேன்.

நினைவுப் பேருரையாற்றுவதற்கு வருகை தந்திருக்கும் எனது ஆசான் திரு. ஆ. ரவீந்திரன் அவர்கள் திரு. திருமதி

ஆறுமுகம் தம்பதியினருக்கு மகனாகப் பிறந்த இவர் திருநெல் வேலியைப் பிறப்பிடமாகவும், சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்டவர். இவர் தனது ஆரம்பக் கல்வியை யா/கைதடி நவீலட் பாடசாலையிலும், இடைநிலைக் கல்வியையும், உயர் கல்வி யையும் யா/இந்துக் கல்லூரியிலும் கற்றார். இவர் முதுகலை மாணி, கலைப்பட்டதாரி, பட்டப்பின் கல்வி டிப்ளோமா போன்ற பட்டங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளார். தற்போது யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் விரிவுரையாளராக கடமையாற்றி வருகிறார். இவர் வருகை விரிவுரையாளராக தேசிய கல்வி நிறுவகம், திறந்த பல்கலைக்கழகத்தில் கடமையாற்றி வருகிறார். இவர் சுன்னாகம் வாழ்வகத்தில் வாழ்நாள் தலைவரா கவும், அகில இலங்கை சமாதான நீதிவானாகவும் சேவையாற்றி வருவதும் மேலும் சிறப்பைத் தருகிறது. இவர் எமது அழைப்பை ஏற்று வருகை தந்ததையிட்டு பேருவகை அடைகின்றோம். இவரது பணிகள் சிறப்பாகத் தொடர இறையாசி வேண்டி மனப்பூர்வமாக நன்றி கூறுகின்றேன்.

130ஆவது ஆவது ஆண்டுகளை நோக்கி நகர்ந்து கல்விப் பணியாற்றி வரும் இப்பாடசாலை "கற்றாங்கொழுகு" என்ற மகுட வாக்கியத்தை தாங்கி தரமான கல்வியினூடாக வளமான சமுதாயத்தை நோக்கி ஒழுக்கமுள்ள பிரஜைகளை உருவாக்கும் பெரும் பணியில் பயனாளிகளான மாணவர்களுக்கு சிறந்த கல்வியை வழங்குவதுடன் அவர்களின் பல்வேறு திறன்களை ஊக்குவித்து தேசிய ரீதியான உச்சப் பயன்களை அண்மிப்பதற் கான உந்து சக்தியாக இன்றைய நாள் அமைகின்றது.

அறிவுசார் உலகின் அபிவிருத்திக்கான திறவுகோலாக அமைவது கல்வியாகும். மனித வாழ்வியலின் அடிப்படையை நிர்ணயிக்கும் காரணியாகவும் அமைகின்றது. சமூகத்திற்குப் பொருத்தப்பாடுடைய உன்னத பிரஜைகளை உருவாக்கும் பொருட்டு பொருத்தமான விழுமிய மனப்பாங்குகளை அடைந்து அவர்களின் சிந்தனைத் திறன், மனவெழுச்சி விருத்திகளை அடையச் செய்யும் நன்நோக்கத்தை எய்தும் வகையில் எமது பாடசாலைச் செயற்பாடுகள் அமைந்துள்ளன.

**மாணவச் செல்வங்கள் :**

எமது பாடசாலையின் தற்போதைய மாணவர்கள் எண்ணிக்கை இருபத்துமூன்று. தொடர்ந்து எதிர்வரும் காலங்களில் மாணவ வளத்தை அதிகரிப்பதற்கு சமூகத்தின் ஒத்துழைப்பை எதிர்பார்க்கின்றேன்.

**ஆசிரியர் குழாம் :**

எமது ஆசிரியர்கள். மாணவர்களது உணர்வுகளுக்கும் உள நிலைகளுக்கும் ஏற்றாற்போல் கடமை உணர்வுடன் தன்னல மற்ற சேவையை வழங்கி வருகின்றார்கள் என்பது சிறப்பானது. இவர்கள் நேரகாலம் பாராது மேலதிக வகுப்புக்களை நடாத்தி வருவது குறிப்பிடத்தக்கது. எமது பாடசாலை ஆசிரியர்களின் சேவை போற்றுதற்குரியது.

**புதிதாக இணைந்தவர்கள்**

**திருமதி ச. பீற்றர் ஹெக்வூட்**

**செல்வி தெ. கலைவாணி**

ஆகியோரின் சேவை எமது பாடசாலையில் சிறப்புற வாழ்த்துகின்றேன்.

**இடமாற்ற விபரம்**

எமது பாடசாலையில் இவ்வருடம் எவரும் இடமாற்றம் பெற்றுச் செல்லவில்லை என்பதை அறியத்தருகின்றேன்.

**கல்வி அபிவிருத்தி**

இன்றைய சூழ்நிலையில் அனைவருக்கும் தரமான கல்வி என்ற செயற்பாடு முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

எமது பாடசாலைக்கு மாணவர்களின் ஒழுங்கான வரவின் மைக்கு வறுமை, போதிய நெறிப்படுத்தல் இன்மை, கற்றல் சூழல் வீட்டில் காணப்படாமை என்பவற்றால் கற்றல் செயற்பாட்டில் நாட்டம் குறைவாக உள்ளது. இவ்வாறான இடர்ப்பாடுகள், பாடசாலையின் அடைவுமட்டம், இணைப்பாடவிதான செயற்பாடு களில் பாரிய தாக்கத்தை விளைவிக்கிறது. மேலும் பாடசாலை

ஆரோக்கியமான கற்றல் சூழல் இன்மை. கவிநிலையாக கற்பிக்கக் கூடிய நிலைகள் இன்மை போன்ற பல்வேறு வசதியீனங்களுடன் தான் இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறான நிலையிலும் பாடசாலை மட்டத்தில் அடிக்கடி பெற்றோர் சந்திப்புக்களை நடாத்தி சில ஆலோசனைகளையும், அறிவுறுத்தல்களையும் வழங்கி இலவச கற்றல் உபகரணங்கள், சீருடை, சப்பாத்து இலவசமாக வழங்கி பாடசாலைக்கு ஒழுங்காக வருகை தரச் செய்யும் செயற்பாடு வெற்றியளித்து வருகின்றது.

அத்துடன் கல்வித் திணைக்களத்தின் ஊடாக பாடசாலை களில் நடைமுறைப்படுத்தப்படும் SLIG, ஆசிரியர் தரவட்டம், உயர்மட்டச் செயற்பாடுகள், தர உள்ளீடு என்பன கற்றல் செயற் பாட்டை வினைதிறன் மிக்கதும் விளைதிறன் கொண்டதாக மாற்று வதற்கு பெரிதும் துணை நிற்கின்றது.

மேலும் 2016ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை யில் 8 மாணவர்கள் தோற்றி அதிகூடிய புள்ளியாக 149 மதிப் பெண்ணை செல்வி. அ. அன்ரனி நிருஜா பெற்றுள்ளார். 100 புள்ளிகளுக்கு மேல் 02 மாணவர்களும், 70 புள்ளிகளுக்குமேல் 04 மாணவர்களும் பெற்றுள்ளார்கள். இவர்களை முழுநேரமாக ஊக்கமளித்துக் கற்பித்த வகுப்பாசிரியர் திருமதி ச. தர்மலிங்கம், ஏனைய ஆசிரியர்களை சமூகம் சார்பில் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**இணைப்பாடவிதானம்**

எமது பாடசாலையின் மாணவர்கள் இணைப்பாடவிதான செயற்பாடுகளில் முழுமையான ஆர்வத்துடன் பங்குபற்றி தங்களது ஆளுமைகளை சிறப்பாக வளர்த்துக் கொள்கின்றார்கள்.

**செயற்பட்டு மகிழ்வோம்**

2016ஆம் ஆண்டு கல்வி அமைச்சின் சுற்று நிருபத்திற்கு அமைவாக செயற்பட்டு மகிழ்வோம் என்ற தொனிப்பொருளில் விளையாட்டு நிகழ்வு 06-03-2016 அன்று எமது பெற்றோர்களின்

அனுசரணையுடன் வெகு சிறப்பாக இடம்பெற்றுள்ளது. இவ்வருடம் வலய மட்ட செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வில் எமது பாடசாலை மாணவர்களின் இடைவேளை நிகழ்ச்சி இடம்பெற்று ஏனையோரின் பாராட்டுதலையும் பெற்றது என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும். பெற்றோர்களின் முழுமையான பங்களிப்பு பாராட்டுதலுக்குரியது. மேலும் மாணவர்களைச் சிறப்பாக பயிற்றுவித்த திரு. க. உதய குமாரன் ஆசிரியரை பாடசாலைச் சமூகம் சார்பில் பாராட்டு கின்றேன்.

**ஆரம்பப் பிரிவு போட்டி**

2016ஆம் ஆண்டில் சித்திரப் போட்டியில் குடும்பமட்டம் 1ஆம் இடத்தையும், கோட்டமட்டம் 1ஆம் இடத்தையும் செல்வி. யூ. அவ்றினா ஜெனிவ்வர் பெற்றுள்ளார். இப்போட்டிக்கு போதிய பயிற்சியும் ஊக்கமும் அளித்த திருமதி ச. தர்மலிங்கம் ஆசிரியரை பாடசாலை சமூகம் சார்பில் பாராட்டுகின்றேன்.

**கண்காட்சி**

வலிகாமம் கல்வி வலய 2016ஆம் ஆண்டுக்கான ஆசிரியர் மாநாட்டில் எமது பாடசாலை ஆரம்பக்கல்வி ஆசிரியர்கள் கற்பித்தல் உபகரணங்களை காட்சிப்படுத்தி பாராட்டையும் பெற்றனர்.

**மன்றங்கள்**

மாணவர்களது படைப்பாற்றல்களுக்கு களம் அமைத்துக் கொடுப்பதோடு அவர்களின் ஆளுமையை விருத்தி செய்யும் நோக்குடன் பல்வேறு மன்றங்கள் செயற்படுகின்றன. அந்த வகையில் மாணவர் மன்றம், இந்துமன்றம், கிறிஸ்தவ மன்றம். சுகாதார மன்றம் செயற்படுகின்றன. இம்மன்றங்கள் மூலம் நவராத்திரி விழா, ஒளிவிழாக்களை முன்னிட்டு கலைநிகழ்வுடன் போட்டிகள் நடாத்தப்பட்டு பரிசில்கள் வழங்கப்படுகின்றன.

**உலக சிறுவர் தினம்**

அதிபர், ஆசிரியர்கள், மற்றும் எமது பாடசாலையின் பழைய மாணவியும் முன்னாள் ஆசிரியருமான திருமதி ம. மத்தியூஸ் ஒத்துழைப்புடன் 03-10-2016 அன்று மாணவர்களுக்கு கருத்

துரைகள் வழங்கி கலை நிகழ்வுகளும் இடம்பெற்று பரிசில்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டது. விசேடமாக மதிய உணவு தயாரித்து வழங்கப்பட்டது.

சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு உடுவில் பிரதேச செயலகத்தினால் சித்திரப்போட்டி 10 மாணவர்களுக்கு நடாத்தப் பட்டு பங்குபற்றிய அனைத்த மாவர்களுக்கும் சான்றிதழ்களும், பரிசில்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டது. இப்போட்டியில் எமது பாடசாலை மாணவன் செல்வன் யோ. கன்யூட் 2ஆம் இடத்தைப் பெற்று மேலதிக பரிசில்களையும் பெற்றார்.

**மதிய உணவு**

உலக உணவுத்திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் மதிய உணவு மாணவர்களின் வருகையை சீராக்குவதற்கும் ஆரோக்கியத்தை ஏற்படுத்துவதற்கும் போசாக்கு மிக்க உணவு வூட்டத்தை வழங்கி வருகின்றது. இதற்காக சமையலாளர்களான திரு. திருமதி பீற்றர் அவர்கள் அர்ப்பணிப்புடன் தன்னலமற்ற அளப்பரிய சேவையை ஆற்றி வருகின்றனர். இவர்களது சேவை சிறக்க இறை ஆசியை வேண்டி நிற்கின்றேன்.

மேலும் அதிபர், ஆசிரியர்கள். வைத்திய அதிகாரி திரு. அ.ஜெயக்குமாரன், பெற்றோர்கள் போன்றவர்களின் பங்களிப்பு பெரிதும் கைகொடுத்து உதவுகின்றது. வடமாகாண கல்வித் திணைக்களம் எமது பாடசாலைக்கு வருகை தந்து இச்செயற்பாடு சிறப்பாக சுகாதார முறைப்படி இடம்பெறுகின்றது என்ற பாராட் டினைப் பெற்றுள்ளது. இத்திட்டத்திற்கு பொறுப்பாசிரியர் செல்வி மே. ஜெயந்தி திறம்பட செயற்பட்டு வருவது பாராட்டுக்குரியது.

**ஒழுக்காற்றுக்குழு**

அதிபரது தலைமையில் ஒழுக்காற்றுக்குழு செயற்படு கின்றது. ஆசிரியர்களின் ஒத்தழைப்புடன் மாணவர்கள் ஒழுக்க விதிகளைக் கடைப்பிடித்து ஒழுக்கசீலர்களாக வழிப்படுத்து கின்றனர்.

**பாடசாலை அபிவிருத்திச் சங்கம்**

எமது பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் செயலாளராக திரு. இ. எயுயீன் மசனட் அவர்களும் ஏனைய உறுப்பினர்களும் தம்மாலான உதவிகளையும் செயற்பாடுகளை எமக்கு நல்கி வருகின்றனர். கடந்த காலங்களைவிட தற்போது இச்சங்கம் சிறப்பாக இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

**ஆசிரியர் கழகம்**

ஒற்றுமை உணர்வுடன் ஆசிரியர்களது நலன்பேணி அங்கத்தவர் சார்ந்த குடும்ப உறுப்பினர்களின் மங்கள, அமங்கல நிகழ்வுகளில் கலந்து கொள்ளல், அன்பளிப்புப் பொருட்களை வழங்கியும் பிரிவு உபசார விழாக்ளை நடாத்துவதுடன் பாராட்டுக் களையும், கண்ணீர் அஞ்சலி தெரிவிப்பதையும் செயற்படுத்தி வருகின்றது.

மேலும் எமது பாடசாலை மாணவர்களின் நலன்களையும் அவசிய தேவைகளையும் நிறைவு செய்வதற்கு இக்கழகம் பெரிதும் கைகொடுத்து உதவி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

**பழைய மாணவர் சங்கம்**

பாடசாலையின் எதிர்காலத் தேவை, அபிவிருத்தி கருதி 06-11-2016 அன்று பழைய மாணவர்களின் அங்குரார்ப்பண கூட்டம் இடம்பெற்று அதிபர் தலைமையில் உறுப்பினர்கள் தெரிவும் இடம்பெற்று பழைய மாணவர் சங்கம் உருவாக்கம் பெற்றது. பல பழைய மாணவர்கள் கலந்து கொண்டனர். இச்சங்கத்தின் செயற் பாடுகள் வளர்ச்சி அடைந்து பாடசாலை சிறப்படைய இறை ஆசியை வேண்டி நிற்கின்றேன்.

**பெறப்பட்ட பௌதீக வளங்கள்**

கல்வி அமைச்சானது மாகாணக்கல்வி அமைச்சுடன் கல்வித் திணைக்களமும் இணைந்து செயற்படுத்துகின்ற அண்மை யிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை (NSBS) தேசிய வேலைத் திட்டத்தின் மூலம் எமது பாடசாலையும் தெரிவு செய்து சிறு திருத்த நிதி ஒதுக்கீடு 2.8 மில்லியன் நிதிமூலம் அதிபர்

அலுவலகம் திருத்தம் செய்யப்பட்டுள்ளது. வலிகாமம் கல்வி வலய சிறுதிருத்த நிதி ஒதுக்கீட்டில் மலசலகூட திருத்தத்திற்காக ரூபா 88,339/- ஒதுக்கப்பட்டு அச்செயற்பாடுகள் சிறப்பாக இடம் பெற்று வருகின்றது.

இவ்வாறான நிதி ஒதுக்கீட்டினை பாடசாலைக்கு சிபார்சு செய்தமைக்காக வலிகாமம் கல்வி வலயக் கல்விப் பணிப்பாளர் உயர்திரு. செ. சந்திரராஜா அவர்களுக்கு பாடசாலைச் சமூகம் சார்பில் இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள் கின்றேன்.

வடமாகாணசபை உறுப்பினர் கௌரவ உயர்திரு. பா. கஜதீபன் அவர்கள் மாகாணசபை நிதி ஒதுக்கீட்டில் ரூபா 80000/- பெறுமதியான அலுமாரிகளை எமக்குத் தந்துள்ளார். இதனை எமக்கு தந்து உதவியமைக்காக பாடசாலைச் சமூகம் சார்பில் மாகாணசபை உறுப்பினருக்கு மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**பெற்றோர் பாதுகாவலர்களே!**

அன்பார்ந்த பெற்றோர்களே உங்கள் பிள்ளைகள் எதிர்கால உலகின் தலைவர்கள். எனவே அவர்களுக்கு உறுதியான அத்தி வாரம் அவசியம். அது பாடசாலையிலேயே ஏற்படுத்தப்படுகின்றது. பாடசாலை சமுதாயத்தில் மிக முக்கியமான நிறுவனமாகும். அதைச் சிறந்த வகையில் வளர்ப்பதற் மூலம்தான் உச்சப் பயனைப் பெறமுடியும். எனவே,

1. பாடசாலையை பேணிப் பாதுகாத்தலுக்கான உங்கள் பங்களிப்பை முழுமையாக வழங்குங்கள்.
2. பாடசாலையின் அதிபர், ஆசிரியர்களுடன் ஆரோக்கியமான இடைத் தொடர்பைப் பேணுங்கள்.
3. நேர்த்தியாக சீருடை, மற்றும் பாதணிகளை அணிந்து வரவும், அவர்கள் ஏனைய மாணவர்களுடன் சமமாகச் சகல செயற்பாடு களிலும் ஈடுபடவும் வழிப்படுத்துங்கள்.
4. பாடசாலை விருத்திச் செயற்பாடுகளில் மாணவர்களை அதிகளவில் ஈடுபட ஊக்கமளியுங்கள்.

5. பிள்ளைகளின் நியாயமான தேவைகளை அறிந்து அவற்றை நிறைவேற்ற ஆவன செய்யுங்கள்.
6. மிக அவசியமான காரணமின்றி எல்லா நாளும் தூய்மை யாகவும், நேர்த்தியாகவும் பிள்ளைகளை பாடசாலைக்கு வர உறுதிப்படுத்துங்கள்.
7. உங்கள் பிள்ளைகள் விலை மதிப்பற்ற செலவங்கள் என்பதை ஒருபோதும் மறவாதீர்கள்.

## பாடசாலைத் தேவைகள் :

### பௌதீகள வளத்தேவைகள்

01. சிறந்த ஆரோக்கியமான கவிநிலையான கற்றலை மேம்படுத்த 1 - 5 வரையான வகுப்பறைகள், கூட்ட மண்டபம் உள்ளடங் கலான இருமாடிக் கட்டடம்.
02. பாடசாலையின் பாதுகாப்பு கருதி முன்புற, பின்புற மதில்.
03. பாடசாலையின் பெயர்ப்பலகை
04. களஞ்சிய அறை
05. நுழைவாயில் செப்பனிடல்
06. பல்லூடக எறியி
07. அறிவுப்பலகை
08. போட்டோப்பிரதி இயந்திரம்
09. ஆசிரியர், மாணவர் மலசலகூடம் அமைத்தல்
10. கணனிகள்

### மனிதவளத் தேவை

1. முழுநேர ஆங்கில ஆசிரியர்
2. சுத்திகரிப்பு தொழிலாளர் (பகுதிநேரமானது)

### நிறைவுரை

இன்று நடைபெறுகின்ற பரிசளிப்பு விழாவிற்கு ஆசியுரை வழங்கி எங்களையும் விழாவையும் வாழ்த்திப் பாராட்டிய அருட்தந்தை ம. றெக்ஸ் சவுந்தரா அடிகளார் அவர்களுக்கு இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

பல்வேறு வேலைச்சுமைகளுக்கு மத்தியிலும் இவ்விழா விற்கு எவ்வித மறுப்புமின்றி பிரதம விருந்தினராகக் கலந்து

சிறப்பித்துக்கொண்டிருக்கும் கோட்டக் கல்வி அலுவலர் திரு. ச. சிவானந்தராசா அவர்களுக்கு எங்கள் மனப்பூர்வமான நன்றி களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மேலும் சிறப்பு விருந்தினராகக் கலந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் லயன். செ. மகாதேவா (MJF) அவர்களுக்கும் எங்கள் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அடுத்து எமது பாடசாலையின் தேவையறிந்து நினைவுப் பேருரை ஆற்றுவதற்கு வருகை தந்திருக்கும் திரு. ஆ. ரவீந்திரன் அவர்களுக்கும் எங்கள் நன்றிப் பூக்களை சொரிகின்றோம்.

மேலும் அதிபர் அறிக்கையுடன் இணைந்த மகுடம் சஞ்சிகையை இலவசமாக வெளியிடுவதற்கு நிதி உதவியை வழங்கிய அமிர்தநிதியம் - புதுமடம் அவர்களுக்கும் எங்கள் இதய பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இன்று இவ்விழா வெகு சிறப்பாக இடம்பெறுதற்கு அழைப்பிதழ், சிற்றுண்டி, ஒலிஅமைப்பு, மேடை, மேடை அலங்காரம், பந்தல், கதிரைகள் போன்றவற்றிற்கான செலவினை எமக்கு மனமுவந்து தந்துதவிய அன்புக்கும் மதிப்பிற்குமுரிய பெற்றோர்களுக்கு உளம் கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இவ்விழாவில் பரிசுகளைப் பெறும் மாணவச் செல்வங் களுக்கு பரிசுப்பொருட்களை முழுமனதுடன் வழங்கிய பெருந்தகை திரு. ஆ. ரவீந்திரன் (வாழ்நாள் வாழ்வகத் தலைவர், சிரேஸ்ட விரிவுரையாளர், யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி) அவர்களுக்கும் நன்றிப் பூக்களைச் சொரிகின்றேன்.

இவ்விழா சிறப்புற நடைபெற கலைநிகழ்வுகளை ஒழுங் கமைத்த பயிற்றுவித்த எமது பாடசாலையின் பழைய மாணவியும், முன்னாள் ஆசிரியருமாகிய ம. மத்தியூஸ் அவர்களுக்கும், பழைய மாணவி பே. பிரியந்தா அவர்களுக்கும், பெற்றோர்களுக்கும் எங்கள் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இவ்விழாவிற்கு பல்வேறு வழிகளிலும் எமக்குத் தோள் நின்று கரம் கொடுத்து உதவிய ஆசிரியர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள் அனைவருக்கும் நன்றிகளை அகமகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்நிகழ்விற்கு வருகை தந்திருக்கும் அயற்பாடசாலை அதிபர்கள், பாடசாலை அபிவிருத்திக் குழு உறுப்பினர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், பழைய மாணவர்கள், அன்பான மாணவச் செல்வங்கள், பெற்றோர்கள் அனைவருக்கும் எங்கள் நன்றிப் பூக்களைச் சொரிகின்றோம்.

எமது பாடசாலையின் தேவைகளை இனங்கண்டு அதிக நலன்காட்டி எம்மை வழிகாட்டி வளர்த்துவரும் வலயக் கல்விப் பணிப்பாளர் அவர்களுக்கு மனப்பூர்வமாக நன்றிகளைத் தெரி வித்துக் கொள்கின்றேன். அத்தோடு பிரதிக் கல்விப் பணிப் பாளர்கள், கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள், சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்கள், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் உள்ளம் கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

பாடசாலையின் அனைத்து செயற்பாடுகளிலும் உன்னத இலட்சியத்துடன் தோள்கொடுக்கும் உபஅதிபர், ஆசிரியர்கள் அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இவ்விழாவிற்கு உரிய வேளையில் அழைப்பிதழ், அதிபர் அறிகையுடன் இணைந்த மகுடம் சஞ்சிகையினையும் சிறந்த முறையில் அச்சிட்டு தந்த விக்னேஸ் பிறிண்டேர்ஸ் நிறுவனத் திற்கும், பல்வேறு உதவிகளை வழங்கிய அனைத்து உள்ளங் களுக்கும் இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்து அதிபர் அறிக்கையினை சமர்ப்பித்துக் கொள்கின்றேன்.

**திருமதி. யாமினி சதீஸ்குமார்**
*அதிபர்*
யா/சுன்னாகம் றோ.க.த.க
பாடசாலை

## எமது பாடசாலை ஆசிரியர் குழாம் – 2015

| | | | |
|---|---|---|---|
| 1) | திருமதி.யா.சதீஸ்குமார் | - | SLTS - 2II - HNDA, Pri - Trd PGDip In .SP.Need |
| 2) | செல்வி.மே.ஜெயந்தி | - | SLTS - I Pri - Trd |
| 3) | திருமதி.ரே.குமாரதாசன் | - | SLTS - I - Pri - Trd |
| 4) | திருமதி. க. உதயகுமாரன் | - | SLTS - I - BA, Dip in Edu |
| 5) | திருமதி.ச.தர்மலிங்கம் | - | SLTS - I - Pri - Trd |
| 6) | திருமதி. அ. உதயகுமார் | - | SLTS - 3I Eng - Trd } பகுதி நேரம் |
| 7) | திருமதி. ச. பீற்றர்றெக்வூட் | - | SLTS - 2 I Rg.Trd } பகுதி நேரம் |
| 8) | செல்வி தெ. கலைவாணி | - | SLTS - 3-I Mus.Trd |

## எமது பாடசாலையில் இயங்கும் மன்றங்கள்

**மாணவர் மன்றம்**

| | | |
|---|---|---|
| தலைவர் | : | செல்வி. அ. அன்ரனி நிருஜா |
| செயலாளர் | : | செல்வன். இ. சாத்ராக் |
| பொருளாளர் | : | செல்வி. க. சானுகா |
| பொறுப்பாசிரியர் | : | திருமதி.ரே.குமாரதாசன் |

**இந்துமாமன்றம்**

| | | |
|---|---|---|
| தலைவர் | : | செல்வி. க. சானுஜா |
| செயலாளர் | : | செல்வி. வ. டிசானி |
| பொருளாளர் | : | செல்வன். சி. சுலக்ஷன் |
| பொறுப்பாசிரியர் | : | திருமதி. ச. தர்மலிங்கம் |

**கிறிஸ்தவ மன்றம்**

| | | |
|---|---|---|
| தலைவர் | : | செல்வன். இ. சாத்ராக் |
| செயலாளர் | : | செல்வி. அ. அன்ரனி நிருஜா |
| பொருளாளர் | : | செல்வி. லூ. ம. ஆன்கிளரென்சியா |
| பொறுப்பாசிரியர் | : | திருமதி ச. பீற்றர்றெக்வூட் |

**சுகாதார மன்றம்**

| | | |
|---|---|---|
| தலைவர் | : | செல்வி. அ. அன்ரனி நிருஜா |
| செயலாளர் | : | செல்வி. க. சானுஜா |
| பொருளாளர் | : | செல்வன் இ. சாத்ராக் |
| பொறுப்பாசிரியர் | : | திருமதி. க. உதயகுமாரன் |

**பாடசாலை அபிவிருத்திச் சங்கம்**

| | | |
|---|---|---|
| தலைவர் | : | திருமதி.யா.சதீஸ்குமார் (அதிபர்) |
| செயலாளர் | : | திரு. இ. எயுயீன்மசனட் |
| பொருளாளர் | : | செல்வி. மே. ஜெயந்தி (உபஅதிபர்) |

**பழையமாணவர் சங்கம்**

| | | |
|---|---|---|
| தலைவர் | : | திருமதி.யா.சதீஸ்குமார் (அதிபர்) |
| செயலாளர் | : | திருமதி அன்ற்மேசி நிர்மலா விஸ்ரர் ஜோசப் |
| பொருளாளர் | : | திரு. த. றெஜிவினிஸ்ரன் |

## யா/சுன்னாகம் றோ.க.த.க. பாடசாலை
## பாடரீதியாகப் பரிசில் பெறுவோர் - 2016

**தரம் - 01**

| | | |
|---|---|---|
| செல்வன். சி. றோகித் | - | தமிழ், கணிதம், பொதுத் தேர்ச்சி |
| செல்வன் எ. போல்நியூலியன் | - | சுற்றாடல், சமயம் |

**தரம் - 02**

| | | |
|---|---|---|
| செல்வன் சி. தாரணிகன் | - | சமயம், தமிழ், சுற்றாடல், கணிதம், ஆங்கிலம், பொதுத் தேர்ச்சி |
| செல்வன். அ. பிரட்றிக்ஜோஜ் | - | R.C சமயம் |

**தரம் - 03**

| | | |
|---|---|---|
| செல்வி. அ. ரோஜாமிஸ்ரிக்கா | - | தமிழ், கணிதம், சுற்றாடல், சமயம், ஆங்கிலம், பொதுத் தேர்ச்சி |
| செல்வி. சு. லதுர்சனா | - | இந்துசமயம் |

**தரம் – 04**

| | | |
|---|---|---|
| செல்வி. அ. அன்ரனிநிருஜா | - | தமிழ், சமயம், ஆங்கிலம், கணிதம், சுற்றாடல், பொதுத் தேர்ச்சி |
| செல்வி க. சானுகா | - | இந்து சமயம் |

**தரம் – 05**

| | | |
|---|---|---|
| செல்வி. அ. ஜோசற்லௌறா | - | ஆங்கிலம், தமிழ், சமயம், சுற்றாடல், பொதுத்தேர்ச்சி |
| செல்வி. வ. டிலைக்சனா | - | இந்து சமயம் |
| செல்வன் சி. சிவநாத் | - | கணிதம், தமிழ் |

## 2016இல் சிறப்புப் பரிசு பெறுவோர் விபரம்

செல்வி யூ. அவ்றினா ஜெனிவ்வர் - சித்திரப்போட்டி

| | | |
|---|---|---|
| குடும்பம் | - | 1ஆம் இடம் |
| கோட்டம் | - | 1ஆம் இடம் |

## 2016 தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையில் 70 புள்ளிக்கு மேல் பெற்றோர் விபரம்

| | | |
|---|---|---|
| செல்வி அ. அன்ரனி நிருஜா | - | 149 |
| செல்வன். இ. சாத்ராக் | - | 124 |
| செல்வி. க. சானுஜா | - | 84 |
| செல்வி. லூ. ம. ஆன்கிளரென்சியா | - | 78 |

## நவராத்திரி விழா போட்டியில் பரிசு பெறுவோர்

**மாலை கோர்த்தல்**

| | | | | |
|---|---|---|---|---|
| தரம் 1 | - | செல்வி யூ. அவ்றினா ஜெனிவ்வர் | - | 1ம் இடம் |
| தரம் 2 | - | செல்வன் றெ. பெனிக்ரன் | - | 1ம் இடம் |
| | | செல்வி. வ. நிதர்சனா | - | 2ம் இடம் |
| தரம் 5 | - | செல்வி அ. அன்ரனிநிருஜா | - | 1ம் இடம் |
| | | செல்வன் இ. சாத்ராக் | - | 2ம் இடம் |

**தோரணம் கட்டல்**

| | | | |
|---|---|---|---|
| தரம் 3 | - | செல்வன் அ. பிரட்றிக் ஜோய் | - 1ம் இடம் |
| | | செல்வன் ஷரோன் ஏஞ்சல் | - 2ம் இடம் |
| தரம் 4 | - | செல்வி ச. லதுர்சனா | - 1ம் இடம் |
| | | செல்வன் சி. சுலக்சன் | - 2ம் இடம் |
| தரம் 5 | - | செல்வன் இ. சாத்ராக் | - 1ம் இடம் |
| | | செல்வன் ம. மதுஷன் | - 2ம் இடம் |

**கோலம் போடல்**

| | | | |
|---|---|---|---|
| தரம் 1 | - | செல்வி யூ. அவ்றினா ஜெனிவ்வர் | - 1ம் இடம் |
| தரம் 2 | - | செல்வன் சி. றோகித் | - 1ம் இடம் |
| தரம் 3 | - | செல்வன் அ. ஷரோன் ஏஞ்சல் | - 1ம் இடம் |
| | | செல்வன் அ. பிரட்றிக் ஜோய் | - 2ம் இடம் |
| தரம் 4 | - | செல்வன் யோ. கன்யூட் | - 1ம் இடம் |
| | | செல்வி அ. றோஜாமிஸ்ரிக்கா | - 2ம் இடம் |
| தரம் 5 | - | செல்வன் இ. சாத்ராக் | - 1ம் இடம் |
| | | செல்வி வ. டிசானி | - 2ம் இடம் |

**ஆத்திசூடிப் பாடல் மனனம் (1 - 20 வரை)**

| | | | |
|---|---|---|---|
| தரம் 1 | - | செல்வன். அ. பெ. தொம்சன் | - 1ம் இடம் |
| தரம் 2 | - | செல்வன் சி. றோகித் | - 1ம் இடம் |
| | | செல்வன் எ. போல் நியூலின் | - 2ம் இடம் |

**சகலகலாவல்லி மாலை**

| | | | |
|---|---|---|---|
| தரம் 4 | - | செல்வி சு. லதுர்ஷனா | - 1ம் இடம் |
| | | செல்வி சி. சுலக்சன் | - 2ம் இடம் |
| தரம் 5 | - | செல்வி வ. டிசானி | - 1ம் இடம் |
| | | செல்வி அ. அன்ரனி நிருஜா | - 2ம் இடம் |

## ஒளிவிழா போட்டி பரிசில் பெறுவோர் விபரம்

**பாடல் ஒப்புவித்தல்)**

| | | | |
|---|---|---|---|
| தரம் 1 | - | செல்வன் அ. பெ. தொம்சன் | - 1ம் இடம் |
| தரம் 2 | - | செல்வன் எ. போல்நியூலியன் | - 1ம் இடம் |
| | | செல்வன் சி. றோகித் | - 2ம் இடம் |
| தரம் 4 | - | செல்வி சு. லதுர்சனா | - 1ம் இடம் |
| | | செல்வன் சி. சுலக்சன் | - 2ம் இடம் |
| தரம் 5 | - | செல்வன் இ. சாத்ராக் | - 1ம் இடம் |
| | | செல்வி அ. அன்ரனி நிருஜா | - 2ம் இடம் |

**செபம் ஒப்புவித்தல்**

| | | | |
|---|---|---|---|
| தரம் 1 | - | செல்வன் அ. பெ. தொம்சன் | - 1ம் இடம் |
| தரம் 2 | - | செல்வன் சி. றோகித் | - 1ம் இடம் |
| | | செல்வன் எ. போல்நியூலியன் | - 2ம் இடம் |
| தரம் 3 | - | செல்வன் அ. பிரட்றிக்ஜோய் | - 1ம் இடம் |
| | | செல்வன் இ. ஷரோன் ஏஞ்சல் | - 2ம் இடம் |
| தரம் 4 | - | செல்வன் யோ. கன்யூட் | - 1ம் இடம் |
| | | செல்வி அ. றோஜாமிஸ்ரிக்கா | - 2ம் இடம் |
| தரம் 5 | - | செல்வி அ. அன்ரனி நிருஜா | - 1ம் இடம் |
| | | செல்வன் இ. சாத்ராக் | - 2ம் இடம் |

**கிறிஸ்தவ வினாவிடை**

| | | | |
|---|---|---|---|
| தரம் 1 | - | செல்வன் அ. பெ. தொம்சன் | - 1ம் இடம் |
| | | செல்வி ம. மதுசாளினி | - 2ம் இடம் |
| தரம் 2 | - | செல்வன் றெ. பெனிக்ரன் | - 1ம் இடம் |
| | | செல்வன் எ. போல்நியூலியன் | - 2ம் இடம் |
| தரம் 3 | - | செல்வன் அ. பிரட்றிக்ஜோய் | - 1ம் இடம் |
| | | செல்வன் இ. ஷரோன் ஏஞ்சல் | - 2ம் இடம் |


| | | | |
|---|---|---|---|
| தரம் 4 | - | செல்வி அ. றோஜாமிஸ்ரிக்கா | - 1ம் இடம் |
| | | செல்வன் யோ. கன்யூட் | - 2ம் இடம் |
| தரம் 5 | - | செல்வன் இ. சாத்ராக் | - 1ம் இடம் |
| | | செல்வி அ. அன்ரனி நிருஜா | - 2ம் இடம் |

**ஆக்கப் போட்டி**

| | | | |
|---|---|---|---|
| தரம் 1 | - | செல்வி யூ. அவ்றினா ஜெனிவ்வர் | - 1ம் இடம் |
| | | செல்வன் அ. வ. தொம்சன் | - 2ம் இடம் |
| தரம் 2 | - | செல்வன் றெ. பெனிக்ரன் | - 1ம் இடம் |
| | | செல்வன் எ. போல்நியூலியன் | - 2ம் இடம் |
| தரம் 3 | - | செல்வன் அ. பிரட்றிக்ஜோய் | - 1ம் இடம் |
| | | செல்வன் இ. ஷரோன் ஏஞ்சல் | - 2ம் இடம் |
| தரம் 4 | - | செல்வி சு. லதுர்சனா | - 1ம் இடம் |
| | | செல்வன் சி. சிவஸ்ரின் | - 2ம் இடம் |
| தரம் 5 | - | செல்வன் இ. சாத்ராக் | - 1ம் இடம் |
| | | செல்வி அ. அன்ரனிநிருஜா | - 2ம் இடம் |

# "மகுடம்"

## சஞ்சிகை



## வணக்கம்

அம்மாவுக்கு வணக்கம்
அப்பாவுக்கு வணக்கம்
ஆசிரியருக்கு வணக்கம்
யாவரும் என்னை வாழ்த்திடவே
இன்பமாக வாழ்ந்திடுவேன்.

## My Book

ஆ.யெ. தொம்சன்
தரம் - 1

I have a Little Book
I Read it every day
I curl up in a Chair
And turn its pages gay
Pictures, happy Stories
Poems and Puzzles too
Whenever you and lonely
A Book,s the Friend
For you.

## My Self

A. Paul Newliyan
Grade - 1

I am a Boy
My Name is Paul Newliyan
I'M Seven Years old
I Live at Chunnakam
I Study at J/Chunnakam R.C.T.M School
My Father name is Augeen
My Mother name is Vathana
I like Cake

# விடுகதை

01. அடுக்கடுக்காய் பட்டு உடுத்து அமர்ந்திருப்பாள் கடைத் தெருவில். அது என்ன?

வெங்காயம்

02. பழமாகிக் காயாகும், காயாகிப் பூவாகும். அது என்ன?

தேங்காய்

03. சிவப்பு நிறச் சிங்காரி தண்ணீர் பட்டால் கறுப்பாயி அது என்ன?

நெருப்பு

04. தண்ணீரில் நீந்தி வரும் தரையிலே தத்திவரும். அது என்ன?

தவளை

05. மரத்து மேலே காய், காய்க்கு மேலே மரம். அது என்ன?

அன்னாசிப்பழம்

*ம. மதுசானினி*

தரம் - 01

# வீடு

வண்ண வண்ண பூ மலர்ந்த
வடிவான வீடு
குப்பை கூளம் எதுவுமற்ற
கொள்ளை அழகு வீடு
அன்புடன் நாம் இருக்க
அமைத்த நல்ல வீடு
என்றும் நாங்கள் கூடியிருக்கும்
எங்கள் அழகு வீடு.

*யூ. அவ்றினா ஜெனிவ்வர்*

தரம் - 1

# வெண்ணிலா

வட்ட வடிவாயிருக்கும்
வெண்ணிலாவே - நீ
வாய் திறந்து பேசுவாயே
வெண்ணிலாவே
ஆகாயத்தில் ஓடு கின்ற
வெண்ணிலாவே
அசைந்தசைந்து போவதென்ன
வெண்ணிலாவே.

*த. விதுர்சனா*
தரம் - 1

# அம்மா

அன்பு காட்டும் அம்மா
அரவணைக்கும் அம்மா

சுத்தம் பேணி நாளும்
சுகம் பேணும் அம்மா

உணவூட்டும் அம்மா
உறங்கவைக்கும் அம்மா

பள்ளியிலே என்னை
படிக்க வைக்கும் அம்மா

என்னுடைய ஆசைகளை
நிறை வேற்றும் அம்மா.

*வ. நிதர்சனா*
தரம் - 2

# My Self

01. My name is V. Dishani
02. I am a Girl
03. I am in grade Five
04. I Live in Chunnakam
05. I am Seven years old
06. I Study at Chunnakam R.C.T.M. School
07. I like Ice-cream
08. My Fater's name is A. Vathanaraj
09. My Mother's name is V. Pakeerthani
10. My Favourite Colour Pink
11. My Home address is Ampanai West, Chunnakam
12. My Hobby is gardening
13. My Favourite Subjects Tamil
14. I like to eat hoppers.

by : **V. Dishani**
*Grade - 5*

# தாலாட்டு

குழந்தைக்கு அன்பு காட்டுதல் மட்டும் போதுமானதல்ல. காட்டப்படும் அன்பைப் பிள்ளை உணரவேண்டும். குழந்தைக்கு சங்கிலி போடுவதிலோ, பிறந்தநாளுக்கு வீடியோ எடுப்பதிலோ பிள்ளை மீது காட்டப்படும் அன்பு உணரப்படமாட்டாது. மாறாக குழந்தை நித்திரைக்கு அழும்போது மடியில் வைத்துத் தாலாட்டுப் பாடுவது குழந்தைக்கு அன்பை உணர்த்தும் செயலாக இருக்கும்.

***சி. சிவஸ்ரீன்***
தரம் - 4

# விடுகதைகள்

01. உரிக்க உரிக்க தோல். அது என்ன?

வெங்காயம்

02. வெள்ளை தாத்தா கறுப்புத் தொப்பி அது என்ன?

தீக்குச்சி

03. வெள்ளை வீதியில் கறுப்புக் கார் ஓடுது. அது என்ன?

கண்

04. தரையில் எறிந்தால் உயரப்பறப்பான். உயர எறிந்தால் தரையில் விழுவான். அது என்ன?

பந்து

05. வாயுண்டு வயிறில்லை அது என்ன?

அகப்பை

06. பேசுவான் வாயில்லை. ஓடுவான் காலில்லை. இயற்கைக்கு அழகு. அது என்ன?

நீர்வீழ்ச்சி

07. மாடேறி மிதியாத குழம்பு திட்டியிலே மண்ணேறி மடி குடிக்குது அது என்ன?

கள்முட்டி

08. ஆடிவருவாள் பாடிவருவாள். வந்த இடம் தெரிந்தும் வந்த வேகத்திலே திரும்பி விடுவாள் அவள் யார்?

கடல் அலை

09. கடிக்கவும் மாட்டான், குரைக்கவும் மாட்டான் வீட்டு வாசல் காப்பான். கதவோரம் ஒட்டிக்கிடப்பான் அவன் யார்?

பூட்டு

10. கலகலப்பாள் சிலுசிலுப்பாள் காகம் இருக்க கொப்பில்லை. அது என்ன?

நெற்கதிர்

*யோ. கண்யூட்*

தரம் -4

# இலங்கை வரலாறு

01. இலங்கையின் வரலாற்றை அறிய உதவும் உள்நாட்டு இலக்கிய மூலாதாரங்கள் எவை?

மகாவம்சம் - தீபவம்சம்

02. அனுராதபுர இராதானியின் முதல் மற்றும் இறுதி மன்னர் கள் யாவர்?

பண்டுகாபயன்

ஐந்தாம் மகிந்தன்

03. பொலநறுவை இராசதானியின் முதல் மன்னன் யார்?

முதலாம் விஜயபாகு

04. இலங்கையை முதன்முதலில் ஒரு குடையின்கீழ் கொண்டு வந்தவன் யார்?

துட்டகைமுனு மன்னன்

05. பொலநறுவையை தொடர்ந்து வந்த இராசதானிகள் எவை?

தம்பதெனியா யாப்பகூவ

குருநாகல் கம்பளை

06. போர்த்துக்கேயர் இலங்கை வந்த காலம் எது? எங்கு?

1505ஆம் ஆண்டு காலிதுறைமுகம்

07. ஒல்லாந்தர் இலங்கை வந்த காலம் எது? எங்கு?

1658ஆம் ஆண்டு மட்டக்களப்பு துறைமுகம்

08. நீண்டகாலம் இலங்கையை ஆட்சிசெய்த மேலைத்தேய வர்கள் யார்?

பிரித்தானியர் (1796 - 1948)

09. இலங்கையின் கடைசி இராசதானி எது?

கண்டி இராட்சியம் (1815 வரை)

10. கண்டி இராட்சியத்தின் கடை மன்னன் யார்?

ஶ்ரீ விக்கிரம இராஜசிங்கன்

*அ. அன்ரனி நிருஜா*

தரம் - 5

# விடுகதைகள்

01. ஓடுவான், ஆடுவான், ஒற்றைக்காலில் நிற்பான். அவன் யார்?

கதவு

02. காண உருவுண்டு, அணைக்க உடல் இல்லை. அது என்ன?

புகை

03. அள்ள முடியும். கிள்ள முடியாது அது என்ன?

தண்ணீர்

04. இறக்கை இல்லாதவன் - ஊர் ஊராய் பறப்பான். அவன் யார்?

தபால்

05. செம்பு நிறையக் கொம்பு அது என்ன?

பல்

06. வளைவான் நெளிவான் அச்சப்படுத்துவான் அவன் யார்?

பாம்பு

07. ஆயிரம் பேர் கட்டிய மண்டபம், ஒருவன் கண் பட்டு உடைந்ததாம். அது என்ன?

தேன்கூடு

08. ஓயாமல் ஓலமிடுவான். ஊரைத் தேடி ஓடி வருவான் அவன் யார்?

அலை

09. ஒரு விநாடிச் சிரிப்புக்காரன் ஊரையே அழிக்க வல்லான் அவன் யார்?

தீக்குச்சி

*சி. சுலக்சன்*
தரம் - 4

# இலங்கையின் தொழிற்சாலைகளும் அமைவிடங்களும்

| | | | |
|---|---|---|---|
| 01. | பிறீமா மா | - | திருகோணமலை |
| 02. | கட்டிப்பால் | - | பொலநறுவை |
| 03. | பால் பதனிடல் | - | அம்பேவல |
| 04. | பால் பவுடர் | - | வெளிசறை |
| 05. | ஓட்டுப்பலகை | - | ஜின்தோட்ட |
| 06. | இரும்புக்கு | - | ஒருவெல |
| 07. | ரயர் ரியூப் | - | களனி |
| 08. | சீமெந்து | - | புத்தளம், காலி, காங்கேசன்துறை |
| 09. | காகிதம் | - | வாழைச்சேனை, எம்பிலிப்பிட்டிய, ராஜாக்கன |
| 10. | புடைவை | - | துல்கிரிய, பூகொட, வியாங்கொட. |

*அ. பிரட்றிக்ஜோய்*
தரம் - 3

# இலங்கையில் சேவைகளைப் பெறும் இடம்

| | | | |
|---|---|---|---|
| 01. | பாடசாலை | - | கல்வி |
| 02. | வைத்தியசாலை | - | மருத்துவ சேவை |
| 03. | மாவட்ட செயலகம் | - | குறிப்பிட்ட மாவட்ட நடவடிக்கை களை மேற்கொள்ளல் |
| 04. | பொலிஸ்நிலையம் | - | பாதுகாப்பு |
| 05. | தபாலகம் | - | தபால் சேவை |
| 06. | தொடர்பு நிலையம் | - | தொலைத்தொடர்பு சேவை |
| 07. | வங்கி | - | பணக் கொடுக்கல் வாங்கல் மேற்கொள்ளல் |

08. நீதிமன்றம் - பிரச்சினை தொடர்பாக நீதியான தீர்வுகளை பெறல்

09. இலங்கை போக்கு வரத்து சபை - போக்குவரத்துச் சேவைகளைப் நடாத்துதல்

10. இலங்கை மின்சார சபை - மின்சாரம் வழங்குதல்

*அ. ஷறோன் ஏஞ்சல்*
தரம் - 3

# புத்தகம்

புரியாதவற்றை புரிந்து கொள்ள புத்தாக்கம் செய்யப்பட்ட ஒரு புதையலே புத்தகமாகும். புத்தகம் சிறுவயதிலிருந்து முதியவர்கள் வரை பயன்படுத்தப்படும். புத்தகத்தை நூல் என்றும் ஏடு என்றும் அழைப்பர். பத்திரிகை போன்றே புத்தகமும் வாசிக்க முடியும். வாசிப்பதால் மனிதன் பூரணமடைகின்றான். புத்தகங்களில் பல வகையுண்டு. பாடசாலையில் கல்வி கற்பதற்கான புத்தகங்கள், கதைப்புத்தகங்கள், கட்டுரைப் புத்தகங்கள், உயர் கல்வி புத்தகங்கள் எனப் பல உண்டு. அரசாங்கம் எமக்குத் தரும் இலவச புத்தகங்களை நாம் கவனமாகக் கையாள வேண்டும்.


நூலகத்திற்குச் சென்றால் பல வகையான புத்தகங்களைப் படிக்கலாம். புத்தகம் எல்லாம் ஒன்றுதான். ஆனால் அதில் இருக்கும் தகவல்களைப் பொறுத்து புத்தகம் ஒன்றுக்கொன்று வேறுபடுகிறது. நாமும் புத்தகம் பல படித்து பயனும் புகழும் பெறுவோம்.

*அ. சறோஜாமிஸ்றிக்கா*
தரம் - 4

# பிறமரபுப் பெயர்கள்

| | | |
|---|---|---|
| கப்பல் ஓட்டுபவன் | - | மீகாமன் / மாலுமி |
| யானை செலுத்துபவன் | - | பாகன் |
| மட்பாண்ட வேலைகள் செய்பவன் | - | குயவன் |
| விமானம் செலுத்துபவன் | - | வலவன் / விமானி |
| கட்டட வேலை செய்பவன் | - | கொத்தன் |
| மரத்தளபாடங்கள் செய்பவன் | - | தச்சன் |
| மீன்பிடிப்பவன் | - | மீனவன் /செம்படவன் |
| சிலை வடிப்பவன் | - | சிற்பி |
| செய்திகளை திரட்டுபவன் | - | நிருபர் |
| கவிதை எழுதுபவன் | - | கவிஞன் |

*சு. வைர்ஷனா*
தரம் - 4



செல்வி யூ. அவ்றினா ஜெனிவ்வர் - தரம் 1

சித்திரப்போட்டி : குடும்ப மட்டம், கோட்ட மட்டத்தில்
1ஆம் இடம் பெற்ற ஆக்கம்

# எமக்கு உதவும் கரங்கள் - 2016

01. வைத்திய அதிகாரி திரு. அ. ஜெயக்குமாரன் - சமையலாளர்களுக்கான கொடுப்பனவு 2015ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் முதல் தலா ரூபா 3000/- இன்று வரை.

02. செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வு பங்களிப்புச் செய்த பெற்றோர்கள்

| | |
|---|---|
| அ. யூட்சன் அன்ரனி | 25000.00 |
| ஜே. லூசின் மரியதாசர் | 3000.00 |
| அ. றெஜிவினிஸ்ரன் | 2000.00 |
| யா. அன்ரன் பிரான்சிஸ் ராசகுமார் | 1000.00 |
| ஞா. அற்புத ஜெயசீலன் | 1000.00 |
| அ. வதனராஜ் | 1000.00 |
| வி. அலெக்ஸ் பெனடிக்ற் | 1000.00 |
| செ. கஜிந்தன் | 1000.00 |
| ம. ஜோன்ரூசோ | 1000.00 |
| சு. சுகந்திரன் | 1000.00 |
| அ. மன்மதராசா | 1000.00 |
| க. எயுயீன் மசனட் | 1000.00 |
| கி. அன்ரனிராஜன் | 1000.00 |
| S. தயாளகுமார் | 700.00 |
| ப. அன்ரெனி மரியதாஸ் | 500.00 |
| சி. சின்னராசா | 500.00 |
| திருமதி சி. றெஜினா | 500.00 |

03. சீருடைத்துணி வழங்கல்
அமரர் தம்பிராசா துரைராசா நினைவாக அன்பளிப்பு பாஸ்கரதேவன் குடும்பம் - அம்பனை.

04. மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் புலமைப்பரிசில் ரூபா 1000/- (செல்வி அ. அன்ரனி நிருஜா)

05. மதிய உணவு
திருமதி ம. மத்தியூஸ் - ஒருநாள் பச்சை மரக்கறி கொள்வனவு ரூபா 500/-

ஆசிரியர் திருமதி க. உதயகுமாரன் - ஒருநாள் மதிய உணவு

06) புலமைப்பரிசில் அதிகூடிய புள்ளி பெற்ற மாணவி
செல்வி அ. அன்ரனி நிருஜா - பரிசில் லயன்ஸ் கழகம், சுன்னாகம்

07) அமரர் பாவிலு அமிர்தநாதன் நினைவாக வழங்குபவர்
அமிர்த நிதியம் - ரூபா 10000/- (மகுடம் சஞ்சிகை வெளியீட்டு நிதி)

08) அருகில் உள்ள பாடசாலை, சிறந்த பாடசாலை செயற்திட்டம். அதிபர் அலுவலகம் திருத்தம் ரூபா 280000/-

09) மலசலகூட திருத்தம் - சிறுதிருத்த நிதி ஒதுக்கீடு ரூபா 89,339/- வலிகாமம் கல்வி வலயம்.

10) வாழ்வகம் வாழ்நாள் தலைவர் திரு. ஆ. ரவீந்திரன் (விரிவுரையாளர், யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி) - பரிசுப் பொருட்கள்

11) திரு. பா. கஜதீபன் அவர்களின் சிபார்சில் வடக்கு மாகாணசபை நிதி ஒதுக்கீட்டில் ரூபா 80,000/- பெறுமதியான அலுமாரிகள்.

12) ஆசிரியர் கழகம் - நினைவுப் பரிசில்கள்

13) திரு. அ. யூட்சன் அன்ரனி
திரு. யா. அன்ரனி பிரான்சிஸ் இராசகுமார் } பந்தல், மேடை, ஒலிபெருக்கி

14) திரு. கி. அன்ரன்ராஜன், திரு. ஞா. அற்புதஜெயசீலன், திரு. அ. மன்மதராசா, திருமதி சி. றெஜினா, திருமதி சி. டயானா } சிற்றுண்டி

15) திரு. செ. கஜிந்தன் - கதிரை

16) திரு. அ. அன்ரன் மரியதாஸ்
வி. அலெக்ஸ் பெனடிக்ற் } மேடை அலங்காரம்

## பாடசாலை அபிவிருத்திக்குழு - 2016

| | | |
|---|---|---|
| தலைவர் | : | திருமதி யா. சதீஸ்குமார் (அதிபர்) |
| செயலாளர் | : | திரு. இ. எயுயீன் மசனட் |
| பொருளாளர் | : | செல்வி. மே. ஜெயந்தி (ஆசிரியர்) |
| ஆசிரியர்கள் | : | திருமதி வே. குமாரதாசன் |
| | | திருமதி க. உதயகுமாரன் |
| | | திருமதி ச. தர்மலிங்கம் |
| பெற்றோர்கள் | : | திருமதி யூ. பிறான்சிஸ்கா புஸ்பராணி |
| | | திருமதி ச. கமலசரஸ்வதி |
| | | திருமதி L.M. றொயலின் |
| பழைய மாணவர்கள் | : | திருமதி ம. மரியகொறட்டி |
| | | திரு. இ. சூரியவதனன் |
| வலயப் பிரதிநிதி | : | திருமதி க. மோகனசுந்தரம் |
| | | (ஆசிரிய ஆலோசகர், வலிகாமம்) |

## பழைய மாணவர் சங்க உறுப்பினர் - 2016

| | | |
|---|---|---|
| தலைவர் | : | திருமதி யாமினி சதீஸ்குமார் (அதிபர்) |
| செயலாளர் | : | திருமதி அனற்மேசி நிர்மலா விஸ்ரர் ஜோசப் |
| உபசெயலாளர் | : | திரு. இ. சூரியவதனன் |
| பொருளாளர் | : | திரு. த. றெஜிவினிஸ்ரன் |
| உறுப்பினர்கள் | : | 1. திரு. அ. யூட்சன் அன்ரனி |
| | | 2. திரு. யே. இரட்ணபோஸ் |
| | | 3. திருமதி ஜெ. அலோசியஸ் |
| | | 4. திரு. ய. அன்ரனி பிரான்சிஸ் இராசகுமார் |
| | | 5. திரு. க. ஆனந்தராசா |
| | | 6. திரு. ஜே. லூசியன் மரியதாஸ் |
| | | 7. திருமதி செ. நீக்கிலஸ் ஞானரட்ணம் |
| | | 8. திரு. பே. யோசப் எடிசன் |





